Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 08 விலை ரூபா 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM WEEKLY வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 மார்ச் (22 - 03 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 32

## 125 பல்க. மாணவர் 1½ வருடம் தடுப்புக்காவலில்

(கொழும்பு)

கடந்த ஒன்றரை வருடகாலமாக 125க்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று பல்கலைக்கழக மாணவர் குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஜே.வி.பியின் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட இவர்கள் மீது இதுவரை குற்றம் எதுவும் சாட்டப்படவில்லை என்றும், சமீபத்தில் இவர்கள் விடுதலை செய்யப்படுவதற்கான சாத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

| கொக்குப்படையான் புலிகள் வசம் | வீழும் நிலையில் சிலாவத்துறை | பல இராணுவம் பலி ஆயுதங்கள் மீட்பு | ஹெலி சேதம் | பல புலிகள் வீர மரணம் |
|---|---|---|---|---|

# சிலாவத்துறை முகாம் மீது புலிகள் தொடர்ந்தும் தாக்கு!

## சேதம் பற்றி தகவல் தர அரசு மறுப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் சிலாவத்துறைப் பகுதியில் இடம்பெற்ற மூன்று நாள் மோதலின் பின் கொக்குப்படையான் இராணுவ முகாம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் வந்துள்ளதாகவும் சிலாவத்துறை முகாம் வீழ்ச்சியடையும் நிலையில் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இம்மோதலின்போது விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று சேதமாக்கப்பட்டதாகவும், பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், மோதல்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகவும் தெரிய வருகின்றது.

இம்மோதலில் புலிகள் தரப்பிலும் பல போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மன்னார் மாவட்டத்தின் இரண்டுமைல் இடைத்தூரத்தில் உள்ள சிலாவத்துறை, கொக்குப்படையான் முகாம்கள் மீது புலிகள் திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதல் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாக தெரிய வருகின்றது.

இத்தாக்குதலினை முறியடிக்க சிறிலங்கா விமானப் படைவிமானங்களும், ஹெலிகொப்டர்களும் புலிகள் மீது பெரும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. சிறிலங்கா கடற்படைக்கப்பல்களும் பெருமளவிலான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 17 போராளிகள் புகழுடல்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன

(மன்னார்)

மன்னாரில் சிலாவத்துறை, கொக்குப் படையான் சிறிலங்கா இராணுவ முகாம்களை தகர்க்கும் சமயம் இராணுவத்தினருடன் நேரடிச் சமராடி வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளிகள் பதினேழுபேரின் புகழுடல்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டுள்ளன. அவர்களின் விபரம் வருமாறு:

சோமன் (விநாயகமூர்த்தி ராசேந்திரன்-கல்வயல் சாவகச்சேரி), குட்டி (இராசநாயகம் செல்வக்குமார் யாழ்ப்பாணம்), சுந்தர் (செபமாலை மரியதபேந்திரன் யாழ்.), ரஞ்சன் (செல்வநாயகம் தயாளன் பருத்தித்துறை), சயந்தன் (செல்வநாயகம் கோணேஸ்வரன் மானிப்பாய்) புலவர் (தர்சன் யோகசாமி செந்தூரன் வல்வெட்டித்துறை, அன்ரனி துரைசமி அகிலன் யாழ்.) லோகன் (சிவப்பிரகாசம் சிவலோகநாதன் மிருசுவில்) ரஞ்சித்-கீதா (கதிர்காமு குணபாலசிங்கம் - பளை). நாதன் (இபாலராசா சிவானந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணமடைந்தோருக்கு யாழ்.குடா எங்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் கொக்குப்படையான் சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்த புலிகளுக்கு யாழ். குடாநாடு எங்கும் அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

யாழ். நகரிலும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழைகள் நட்டப்பட்டுத் தோரணங்களும் கொடிகளும் தொங்க விடப்பட்டுள்ளன.

வீரமரணமடைந்த புலிகளின் புகழ் உடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வலிகாமப் பகுதியில் சண்டிலிப்பாயிலும், வடமராட்சியில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறையிலும், தென்மராட்சிப் பகுதியிலும் வைக்கப்படும்.

## இன்று தாக்குவதை விட பாதுகாப்பதே கவலையாம்

(லண்டன்)

மன்னாரின் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் புலிகள் மீது தாக்குதல் நடாத்துவதிலும் பார்க்க இன்று வடக்கிலுள்ள தமது கரையோரப் பகுதி முகாம்களைப் பாதுகாப்பதே சிறிலங்கா இராணுவத்திற்குப் பெரும் கவலையாக உள்ளதாக நேற்றிரவு பி.பி.ஸி. தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

மடுவைச் சுற்றியுள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் பெரியதோர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு வருவதாக இராணுவம் கூறியது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### "பிரதீப்", "சுடர்"

(திருகோணமலை)

நேற்று முன்தினம் திருமலை பொன்னகாணிப் பகுதிக்கு அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் "பிரதீப்" என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். நேற்று முன்தினம் ஆனையிறவு இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் "சுடர்" (இன்னாசிப்புராசா இராஜமோகன்- கிளிநொச்சி) என்ற போராளி வீரமரணமடைந்தார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயாராக உள்ளது

### - பிரட்மன் வீரக்கோன்

(டில்லி)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு இன்னும் தயாராக இருக்கிறது என சிறிலங்கா அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

செய்தியாளர் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக வெளிவந்த செய்திகளை மறுத்தார்.

இத்தகவலை இந்திய வானொலி வெளியிட்டது.

## 125 யார் உயரத்தில் இருந்து குண்டு வீச்சு நடத்துகிறோம்

### - சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

"பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு நிலத்தில் இருந்து சுமார் 125 யார் தொலைவில் இருந்தே விமானங்கள் குண்டுகளை போடுகின்றன" என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

விமானத் தாக்குதல் தொடர்பான பொது மக்களின் புகாரினை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இலக்கை நோக்கி விமானங்கள் குறிபார்த்த போதிலும் நிலத்தில் இருந்து 125 யார் தூரத்திலேயே குண்டுகள் வீசப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## எதிர்பாராது சந்தித்த புலிகள் - இராணுவம் சமர்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பொன்னகாணி என்ற இடத்தில் அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் மூதூரில் இருந்து பொன்னகாணி நோக்கிச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளுக்கும் எதிர்பட்ட இராணுவத்தினருக்கும் இடையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்குழுவின் உதவியுடன் திருமலையில் தமிழர் கைது

(திருகோணமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடாத்துவதும் அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்வதும் தொடர்கின்றது.

கடந்த திங்கட்கிழமை உவர்மலைப் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அப்பகுதியில் முகமூடி தரித்த தமிழ் ஆயுதக்குழுக்களின் உதவியுடன் தேடுதல் நடாத்தினர். தேடுதலின் போது ஒன்பது அப்பாவி ஆண்களைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைக் கண்காணிக்க சார்க் நாடுகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலைக் கண்காணிக்க "சார்க்" நாடுகளுக்கு அழைப்பு விடுக்க சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தீர்மானித்துள்ளார். சார்க் நாடுகள் அமைப்பின் செயலாளர் கே.கே. பார்க்கவாவுக்கு இதுதொடர்பாக ஜனாதிபதி பிரேமதாசா எழுதியுள்ள கடிதத்தில் இத்தேர்தலைக் கண்காணிக்கப் பொருத்தமான உயரதிகாரிகளைத் தந்துதவுமாறு கேட்டுள்ளார். உள்ளூராட்சி சபைகளுக்கான நியமனப் பத்திர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எஸ் சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ருடியோ பின்புறம், யாழ்ப்பாணம்; (B 2169)

### கொழும்பு ஸ்ருடியோ

புளொக் (Block) புகைப்படம், றபர்சீல், கலர்படம், ஓவியம் பிரேம்போடுதல், கலர் பிலிம், சுருள்கள், ஸ்ரிக்கேஸ் முதலியனவற்றிற்கு நாடுங்கள்: கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். (B/2090)

### அக்கு பஞ்சர் சிகிச்சை

கொழும்பு அரச வைத்திய சாலையில் விரிவுரையாற்றும் டாக்டரினால் மானிப்பாயில் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நோயாளர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி இல. 95, யாழ்வீதி, மானிப்பாய். (R/1197)

### விற்பனைக்கு

நிதான விலையில் உப்பு விற்பனைக்கு உண்டு. கருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்பும் கட்டி உப்பும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கட்டி உப்பு மொத்தவிலை 6 50 சில்லறை விலை ரூ 7 00 கிடைக்குமிடம் ஸ்ரீ சயிமி 76 (228) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். R/1200


## சேவைக்காலக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர வர்த்தக ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்குகள் யாழ் மாவட்டத்தில் உள்ள கோட்டக்கல்வி அலுவலக மட்டத்தில் நடைபெறவுள்ளது.

எதிர் வரும் 26 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் 27ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் 28ஆம் திகதி மருதனாமடம், பண்டத்தரிப்பு, வேலணை, யாழ்ப்பாணம், ஆகிய கோட்டங்களுக்காக யாழ். இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் இக்கருத்தரங்குகள் யாவும் காலை 8 30 முதல் மாலை 4. 5வரை தொடர்ந்து நடைபெறும். (க)

## இளைஞன் படுகாயம்

(புங்குடுதீவு)

பனையில் இருந்து விழுந்ததனால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்

இச்சம்பவம் கடந்த பதினாறாம் திகதி இடம்பெற்றுள்ளது புங்குடுதீவு பன்னிரெண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த அடிக்சன் (வயது 19) என்பவர் பனையில் ஏறிய போது கைதவறி கீழே விழுந்ததனால் கால் முறிந்த நிலையில் படுகாயமடைந்துள்ளார் எழுந்து நடக்க முடியாத நிலையில் உள்ள இவர் தற்போது தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் சிகிச்சைபெற்று வருகின்றார். (22)

## மீண்டும் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

கடந்தவருடம் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் தடைப்பட்டிருந்த செயற்திட்டமுறைச் சிரைப்படுத்தும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று திருநெல்வேலியில் உள்ள பிராந்திய செயலகம் முறை சிரைப்படுத்தும் நிறுவனம் அறிவித்துள்ளது. (24)

# இளர்ச்சியைத் தூண்டுவதாக ஈரான்மீது குற்றச்சாட்டு

(பாக்தாத்)

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக நடைபெறும் கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு ஈரான் ஆதரவு தெரிவித்து வருவதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது, பெரும் எண்ணிக்கையிலான கிளர்ச்சி வாதிகளை ஈரான் தனது நாட்டிற்குள் அனுப்பி வைத்திருப்பதாக ஈராக் தேசிய சட்டப் பேரவையின் சபாநாயகர் கூறியுள்ளார்.


## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. லேத் மிசின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு

தொடர்பு: பாலகோ லைத பனம்
முத்திரைச்சந்தை, நல்லூர். (B.2156)

## முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சையும் இலவச கருத்தரங்கும்

(தடைப்பட்ட பரீட்சைகள்)

பிரவேசம்:- எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

### A / L 90 [01-04-1991 முதல்]

பரீட்சை: இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களின் பகுதி I மட்டும் பயிற்சிப் பரீட்சையாக நடத்தப்படும்.

கருத்தரங்கு: விஞ்ஞான, வர்த்தக, கலைப்பிரிவுகளின் அனைத்துப் பாடங்களின் I. II பகுதிகளுக்குரிய மாதிரி வினாத்தாள்களுக்கான கருத்தரங்கு இலவசமாக நடத்தப்படும்.

### [O / L 90 -திகதி அறிவிக்கப்படும்]

அனேக பெற்றோர், ஆசிரியர், மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பரீட்சைக்கான அனைத்துப் பாடங்களும் பகுதி I, II க்கு உரிய பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.

விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, கருத்தரங்கு இலவசமாக நடத்தப்படும்.

### ஆண்டு 5 (புலமைப் பரிசில் பரீட்சை)

கணிதம், தமிழ்

23-03-91 பி. ப. 3-00 மணி தொடக்கம் பரீட்சை
24-03-91 பி. ப. 3-00 மணி தொடக்கம் இலவச கருத்தரங்கு.


(பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும்.)

### மாணவர்களின் போக்குவரத்து சிரமங்களைக் கருத்தில் கொண்டு

- யாழ். மாணவர்களுக்கு — BOND கல்வி நிறுவனம், 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;
- தென்மராட்சி — திரு பாலகிருஷ்ணன், Brilliant கல்வி நிறுவனம், சங்கத்தானை, சாவகச்சேரி.
- வடமராட்சி — திரு. A N. மனுநீதி, விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி.
- தீவகம் — திரு கதிர், V. T. C, வேலணை.
- காரைநகர் — திரு. V. இந்திரன், கவிதா கல்வி நிலையம், செம்பாடு, காரைநகர்;
- கிளிநொச்சி — திரு மரியதாஸ், விஞ்ஞானக்கல்வி நிலையம், கிளிநொச்சி.

மேலதிக விபரங்களுக்கு:

Examination Unit
BOND Institutes
58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்; (B-2175)


## மார்ச் 22



லெப்டினன்ட் சஞ்சீவி (மீசை)
(செல்லப்பா செங்காதரன்- மல்லாகம்)



விசைவீரன்
(அருளையா அருணேஸ்வரன் - காரைநகர்)

1985ஆம் ஆண்டு மட்டக்களப்பு அமிர்தகழியில் இடம்பெற்ற சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

ராணி (டேவிட் அற்புதராஜன் - அமிர்தகழி)
சிந்து (தம்பிராசா லோகநாதன் - ஏறாவூர்)

இதே ஆண்டு கல்லாறில் சிறிலங்கா இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

சிலன் (ஆ. வேதாரணியம் - செட்டிகுளம்)

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி அக்கராயன் குளப்பகுதியை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப்.சஞ்சீவி/மீசை (செ. செங்காதரன்- மல்லாகம்)
வசந்தன் (இ யோகராசா - கிளிநொச்சி)
வினோத் (ஆ வீரசிங்கம் - வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

1988ஆம் ஆண்டு வீஸ்வமடுவில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

லெப்.துர்க்கா
(சச்சிதானந்தம் சுமனாதேவி - புதுக்குடியிருப்பு)

இதேஆண்டு முல்லைத்தீவில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரமரணமடைந்த

மரியதாஸ்/சந்திரன் (சிங்கராயர்மரியதாஸ்-சாவகச்சேரி)

1987ஆம் ஆண்டு வாழைச்சேனையில் இந்திய இராணுவம் மற்றும் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப் மோகன் (சி. தயா - வாழைச்சேனை)

இதே ஆண்டு அலம்பிலில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

கப்டன் லைலை (க. முத்துராசா - மன்னார்)
2ஆம்லெப்.கிர்மானி (ஏ.உதயகுமார்-கொழும்புத்துறை

1990ஆம் ஆண்டு மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த

விசைவீரன்/மந்திரி
(அருளையா அருணேஸ்வரன் (காரைநகர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2153)

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி



வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரம்கொள் கூட்டம் அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்றும்
உடலினால் பலராய் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணா-
-தேயெனை
வையம் கலங்கக் கண்டு
உள்ளம் துள்ளும் நாள்
எந்த நாளோ?

- பாரதிதாசன்

## கால மாற்றம்

பூமியென்னும்
பூ மரத்தில்
புதிதாய் மொட்டுவிரித்த
புஷ்பமே...
நீ -
யாரைப் பார்க்கிறாய்?
இதோ -
இப்போது
உன் விழிக் கண்ணாடியில்
விழுவது -
மேகமா? பாடித்திரியும்

பறவைகளா?
சொல் பூவே...!
என்ன தான்
நீ சிந்தனை செய்கிறாய்?
கிழக்கின் சுவரை உடைத்து
சிவப்பாய்ச்
சிரித்து வரும்
சூரியனையா
நீ தரிசனம் செய்கிறாய்?
பிஞ்சு உதடுகள் நெளித்து
நீ மீட்ட

ஆர்வப்படும்
இராகம் -
மோகனமா?
அடடா!
உன் மௌன ஆராய்ச்சியில்
ஒரு மாபெரும்
தத்துவம்
பிரசவமாகப் போகிறதோ?



- வவுனியா திலீபன்




**1987** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இந்த நாளை எந்தத் தமிழீழ மகனும் மறக்கமாட்டான். இந்திய அரசை நம்பி எமது மக்களின் பாதுகாப்புக் கவசமாக இருந்த எமது ஆயுதங்களின் ஒரு பகுதியை ஒப்படைத்த நாள். உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்படும் ஆயுதம் சுடுமா சுடாதா என்று இந்திய இராணுவத்தினரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பந்தயம் கட்டிக்கொண்டிருந்தனர் அதேநேரம் யாழ். திருநெல்வேலி பல்கலைக்கழகத்தற்கு முன்னாலுள்ளஎமது தலைமையலுவலகம் பத்திரிகையாளர்களால்திறைந்திருந்தது. தலைவருடனான சந்திப்பை முடித்துக் கொண்டு வந்த அவர்கள் ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சியை நேரில் பார்ப்பதற்காக காத்திருக்கின்றனர். நேரம் போய்க் கொண்டேயிருந்தது ஒருஇந்திய இராணுவ அதிகாரி சுடுதண்ணீர் குடித்த நாய் போல அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அவரது கண்ணில் தென்படும் எல்லோரிடமும் போய் ஒரே கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். அனைவரும் ஒரே பதிலையே சொல்கின்றனர். "ஜொனிக்குத்தான் தெரியும். ஜொனி வரட்டும்"

ஜொனியின் வாகனம் வந்தது. வாகனத்திலிருந்து இறங்கி வந்த ஜொனியிடம் நெருங்கி வந்த அந்த இந்திய இராணுவ அதிகாரி கோபமும் அதிகாரமும் கலந்த குரலில் "ஜொனி; ஜொனி; எவ்வளவு நேரம் காத்திருக்கிறது?" என்று கேட்டார். அவ்வளவுதான். நெற்றிக் கண் ஒன்று இருந்தால் எவ்வாறு சிவக்குமோ அப்படி மாறியது ஜொனியின் முகம். "எத்தினை வருஷமா, எத்தினை உயிரைக் கொடுத்து எடுத்த ஆயுதம் நீ நினைச்ச உடனை, நீ நினைச்ச மாதிரி தரமுடியுமே?" ஜொனியின் சீற்றத்தைக் கண்டதும் பெட்டிப் பாம்புபோல் அடங்கினார் அந்த இந்திய இராணுவ அதிகாரி அன்று ஜொனி நின்ற கோலமும் சொன்ன வார்த்தைகளும் எல்லா விடுதலைப் புலிகளினதும், ஏன் மொத்தத் தமிழ் பேசும் இனத்தையே பிரதிபலித்தது.

வேட்டை நாய்கள் போல் மூலைக்கு மூலை மோப்பம் பிடித்துத் திரிந்த ஸ்ரீலங்காப் படைகளுடன் கிளித்தட்டு மறித்த காலம் முதல் அவர்களை முகாம்களுக்குள் முடங்க வைத்த காலம் வரை இவனது கண்ணெதிரே எத்தனை போராளிகள் பலியாகியுள்ளனர்? எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டது? இப்படியான போராளிகளின் மனவுணர்வு எப்படியிருக்கும்? இதையெல்லாம் தெரியாத அந்த இந்தியக் கூலி இராணுவ அதிகாரிக்கு இந்தப் பதில் பொருத்தமானதுதான்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஜொனியின் பங்கு பட்டியலிட்டுச் சொல்ல முயன்றால் அது அனுமார் வால் மாதிரி நீண்டு கொண்டே போகும் ஒரு நாள் நள்ளிரவு நேரம் கெருடாவிலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் வழி மறிக்கப்பட்டான் ஜொனி. அடையாள அட்டையைக் கேட்டனர் அவர்கள், அடையாள அட்டையை எடுப்பதுபோல் பாவனை செய்து தனது கைத்துப்பாக்கியால் பதிலளித்தான் அவன். ஒரு படை மாண்டுபோய், இரண்டு படை காயமுறவே ஏனையோர், சிதறியோடினர், துணிச்சலுடன் தனியொருவனாகச் செய்த இச்சாதனை இதோ ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என இவனை இனங்காட்டியது. அன்றிலிருந்து அவன் மரணிக்கும் வரை அவனது சாதனைகள் தொடர்ந்த வண்ணமேயிருந்தன

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலிலிருந்து தொடர்ச்சியாக வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முகாம் தாக்குதல்கள், வெளியேறும் இராணுவத்தினர் மீதான தாக்குதல்கள் எனதொடர்ச்சியாக இவனது பங்களிப்பு இருந்த வண்ணமே இருந்தது. சுதுமலை இராணுவமுற்றுகை முறியடிப்பு, தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதல் என்பனஇவனது திறமையைப்பறைசாற்றின வெளிவர முயலும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்தவோ, தாக்குதல் எதிலும் ஜொனி பங்குபற்றவில்லை என்றோ குறிப்பிடக் கூடிய காலம் எதுவென்றால் பலாலி இராணுவத்தினருடனான மோதலில் தலையில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற காலம்தான். ஏனைய நாட்களிலெல்லாம் படுக்கைக்குப் போகும் நேரத்திலோ அல்லது நள்ளிரவிலோ இராணுவம் வெளியேறுகிறது என்றால் படுக்கையைச் சுற்றக் கூடத் தாமதிக்காது நேரே களத்திற்குப் பாய்ந்தோட வேண்டியது தான்.

தலைமை அலுவலகத்தில் கிட்டுவுடனேயே இருந்ததால் சகல பொறுப்புக்களையும் சுமக்க வேண்டும். போராளிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், கிட்டுவைச் சந்திக்க வருவோரோடு உரையாடி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என 'மேலதிக சுமைகளும் இவனுக்கு. கண்களில் தூக்கக் கலக்கம் சுழன்றாடும் வேளையிலும் இதழில் புன்முறுவல் தவழ்ந்தபடியே அலுவலகத்திற்கு வருபவர்களோடு உரையாடிக் கொண்டிருப்பான்.



**லெப்ரினன்ட் கேணல் ஜொனி**

வலிகாமம் பகுதிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட இவன் குமரப்பாவின் மறைவைத் தொடர்ந்து அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டியவனானான். இந்தி(ய)ப் படைகளுடனான தாக்குதலின் போது காயமடைந்த அவன் தமிழகத்துக்குச் சென்றான். இந்திய அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தைகளின் போது சில இறுதி முடிவுகள் எடுப்பதற்காக தலைவரைச் சந்திக்க வேண்டியிருந்தது 'நாமே அழைத்துச் செல்கிறோம். மீண்டும் எங்களை நம்புங்கள்என்றார்கள்' இந்தியர்கள். நம்பினோம். ஜொனி திரும்பி வரவில்லை.

ஆயுதக் கையளிப்பின் பின் எமது போராளிகளில்நிகழ்ந்த கொலை, திலீபனின் மரணம் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகளின் மரணம், எமது மக்கள் மீதான போர் என தொடர்ந்த நம்பிக்கைத் துரோகம் ஜொனியின் மரணம் வரை நீடித்தது. அதற்குப் பின் எந்த வடிவத்திலும் நப்பிக்கை வைக்கத் தயாரில்லை. மனித இனத்தின் மிகக் குறைந்த பட்சமான நாகரிகத் தன்மை கூட இல்லாதவர்களை எப்படி நம்புவது? இதன் பின் ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள்கள் அனுப்பப்படவில்லை. அனுப்பப்பட்டதெல்லாம் இந்திய இராணுவத்தினரின் சடலங்களே. நேபாளம், பூட்டான் படிப்பிக்கத் தவறியபாடத்தை தமிழீழம் இந்திய வல்லாதிக்க பூதத்திற்குப் படிப்பித்தது.

ஜொனியின் மரணம் நம்பிக்கெட்ட வரலாற்றின் முற்றுப் புள்ளி. இவனின் வாழ்வு போராட்டத்தினுள் உள்வாங்கப்படும் போராளிகளுக்குப் பாலபாடம்.

# இரட்டை நாக்கு

மானிப்பாய்ச் சந்திக்கு அண்மையில்; தென்னந்தோட்டத்துள் தெளிவாகத் தெரியும் அந்தவீடு "மாலதி வாசா"வாகும். பெரியகடையில் இருக்கும் "மாலதி ஸ்ரோஸ்;" இணுவிலில்இருக்கும்" மாலதி பணணை;" வவுனியாவில் இருக்கும் "மாலதிமில்" இவை எல்லாம் மாலதி வாசாவில் வசிக்கும் மயில்வாகனம் முதலாளிக்குச் சொந்தமாகும்.

ஒரேமகள்மாலதியை புங்குடுதீவு பொன்னையா முதலாளியின்மகன் டொக்டர் புவனசுந்தரத்துக்குக் கலியாணம் செய்வித்து; கையோடை அவர்களைப்பிடித்து லண்டனுக்கு அனுப்பிவிட்டு; மயில்வாகனம் முதலாளியும் மனைவியும் நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

அந்தப் பெரியவீட்டின் இரும்புக்கேற்றடியில் நின்று கொண்டிருந்த அல்சேசியன் நாய் அட்டகாசம் போட்டுக் குலைக்கின்றது. சமையல் அறையில் இருந்து வெளிவந்த முதலாளி மனைவி முத்தம்மா கோபமடைந்து 'எடே பழணி! உங்கை என்னடா செய்யிறாய்? பங்கை பாரடா! கேற்றடியிலை பிச்சைக்காறனோ; விசரனோ... ஆரோ நிக்கிறான்! போடா போய் துரத்தடா அவனை" என்றுவேலை ஆளுக்குக் கட்டளையிட்டு விட்டு தனது பெரிய உடலை வெட்டித் திருப்பியபடி வீட்டினுள் நடக்கின்றா

சில வினாடிகளில் சென்று திரும்பிய பழணி "அம்மா! அந்த ஆள் பிச்சைக்காறன் இல்லையாம். ஐயாவைத்தேடி வந்தவராம்; திருக்கணாமலையிலை கடைவைச்சிருக்கிற கந்தையா முதலாளியாம் தான்; பொலநறுவையிலை நெல்லுக்கடையும் இருக்காம்; ஐயாட்டைச் சொன்னால் தெரியும் எண்டு அந்தாள் சொல்லுதம்மா! "என்று பழணி விளக்கம் கொடுக்க முத்தம்மா அதை ஏற்காது, மேலும் சப்தம்போடுகிறா. 'என்னடா? முதலாளியாமோ? மூஞ்சை முழுக்க மயிரும்; ஊத்தை வேட்டி சேட்டோடைவந்து நிற்கிறான் அவன்! ஆரோ கள்ளனோ கிள்ளனோ தெரியாது! போடா குரங்கு.! போய் அவனைக் கலைச்சுப் போட்டுவாடா!" என்று எசமானி ஏவ பழணி மீண்டும் கேற்றடியை நோக்கி நடக்கிறான்.

மனைவியின் குரல் இடி கேட்டு, பின்வளவில் நின்று முன்னுக்கு வந்த மயில்வாகனம் கேற்றடியில் நடைபெறும் ஆள்விரட்டல் படலத்தைப் பார்வையிட மேலும் முன்னேறிப் போகிறார்.

முதலாளியைக் கண்ட அந்த மனிதர் 'முதலாளி... முதலாளி' என்று உரத்துக் கூப்பிடவும்; மயில்வாகனத்தார் அவ்விடத்துக்குப் போகிறார்.

"முதலாளி என்னைத் தெரியல்லையே? நான்தான் திருக்கணாமலைக் கந்தையா!" என்று அவர் தன்னை அடையாளம் செய்கிறார்.

"என்னப்பா? கந்தையா அண்ணையே? என்ன கோலம் இது! வாருங்கோ உள்ளுக்கு..." என்று அனுதாப அவலத்தோடு: அவரை வரவேற்று; அல்சேசியனை அடக்கிவிட்டுக் கொண்டு, அழைத்துவருகிறார்!

திருக்கோணமலையில் கடை வயல் புலங்கள், பொல்லநறுவை கதிறு வெலையில் நெல்லுக்கடை, லொறியள் – மில்லுகள் என்று வாழ்ந்துவந்த பெரிய புள்ளியான கந்தையா முதலாளியின் கந்தல் உடை உடுத்த கோலம் கண்டு மயில்வாகனம் கதிகலங்கிப்போனார். வீட்டுக்குள் அவரை அழைத்து வந்ததுவும்; கதிரையில் இருத்தி மரியாதை செய்வதும்; முத்தம்மா ஏற்றுக் கொள்ளாத நிலையில், கணவரை எரிச்சலோடு "இஞ்சேருங்கோ... உங்களைத்தான்! ஒருக்கா வந்திட்டுப் போங்கோ!..." என்று கூப்பிடுகிறார். சமையல் அறைக்குள் நுழைந்து மனைவியை சமாதானம் செய்து; வில்லங்கப்பட்டு விளக்கம் கொடுத்துவிட்டு, கந்தையரைக் குந்த வைத்த இடத்திற்கு மயில்வாகனத்தார் விரைகிறார்.



## சிறுகதை

**என். கிருஷ்ணசிங்கம்**

சோகங்களின் சுமையோடு, பஞ்சத்தால் அடிபட்டுப் பஞ்சடைந்துபோன கண்களோடு; நடை நடையாக அலைந்து இளைத்துக் களைத்துப்போன உடலோடு; அழுக்கடைந்த உடையோடு அந்தப்பெரிய முதலாளி இருக்கும் இன்றைய தோற்றம்!... மயில்வாகனத்தை மலைப்படைய வைத்தது!

"பிறகு என்னமாதிரி முதலாளி உங்கடைபாடுகள்? எப்பிடி இஞ்சை வந்தனியள்? உங்கடை குடும்பம் எங்கே இருக்கினம்? மகன் ரெண்டு பேர் இருந்தவையல்லோ? எல்லாற்றைபாடுகளும் என்னமாதிரி? கடைகண்ணியள் லொறியள் எல்லாம் என்ன மாதிரி? என்று கோவையற்ற கேள்விகளை மயில்வாகனம் அடுக்கிக் கொண்டு இருக்க; தொங்கிய தலையோடு கண்களை மூடிக் கலங்கிய கந்தையரின் அடிவயிறு குலுங்கி... அது அழுகையாக மாறியது

சிறியமௌனம் இறுக்கமான ஒரு நிலைமையை அங்கு உண்டாக்கியது. ஒரு விதமாகக் குமுறலை அடக்கிக் கொண்டு தலை நிமிர்ந்த கந்தையர் தனது அந்த அழுக்கடைந்த சால்வையால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்! அவரின் விரல்களின்படபடப்பு ஓயாத உள்ளக் குமுறலை உணர்த்தியது காய்ந்துபோன அந்த உதடுகளினிடையே இருந்து பிறந்த குமுறல் மொழி "எல்லாம் போச்சுது" என்ற சொற்களை மட்டும் உதிர்த்து நின்றன.

பழணி ஒருதட்டில் கோப்பியோடு வருகிறான். முக்காலி ஒன்றில் அதைவைத்துவிட்டு; விடுப்புக்கேட்கும் நோக்கோடு மறைந்து நிற்கின்றான்.

'கந்தையா அண்ணை! கோப்பியை எடுத்துக் குடியுங்கோ!" என்று கூறிவிட்டு; அனுதாபப் பார்வையோடு அவரை அளந்து கொள்கிறார் மயிலர்.

கந்தையரின் மௌன அணை கலைகின்றது... உடைகின்றது! மூடிக்கிடந்த அந்தக் கருமை படர்ந்த விழிமடல்கள் திறக்கின்றன! தீப்பந்தம் போன்று சிவந்து கிடந்த விழிகள்மின்னுகின்றன...! விரிந்த மூக்கின் துவாரங்களை கருக்கிய வண்ணம் வேதனை மூச்சுக்கள் வெளிக்கிளம்புகின்றன! ஆழமான கிணற்றுக்குள் இருந்து கதைப்பது போன்று அவரின் அந்தக் குமுறல் மொழி அலறுகின்றது! "எல்லாம் போச்சுதடா தம்பி! போச்சுது! வீடு வாசல்... கடையள்... லொறியள் எல்லாம்..., எல்லாத்தையும் எழிய சிங்களவர் எரிச்சுப் போட்டான்கள்! நாங்கள் ... வெளிக்கிட்டு காட்டுக்கை ஓடினம் தம்பலகாமமவரை வந்தம்! பிறகு... பிறகு..." என்றவர் மீண்டும் தேம்பித் தேம்பி அழுகிறார்.

கதையில் சுவாரஸ்யம் அடைந்த முத்தம்மா அடுக்களையை விட்டு வெளிவந்து ஓரத்தில் நின்று கதைகேட்கிறா. பழணியும் பரிதாபமான பார்வையோடு கந்தையரை நோக்கியபடி நிற்கின்றான் "பிறகு என்ன அண்ணை நடந்தது? ..." என்று மயிலர் அவரை அனுதாபத்தோடு முடுக்கினார்!

"ஒரு ராவும் பகலும் காட்டுக்குள்ளாலை போனம்! இடையிலை என்ரை கடையிலை நிண்ட சலீம் எண்ட சோனகனும் சிங்களவன்களும் எங்களை மறிச்சுப் பிடிச்சிட்டான்கள் ஐயோ...! என்ரை ரெண்டு பிள்ளையளையும்... அவன்கள் அடிச்சு விழுத்தினான்கள்; ஐயோ... எங்கடை கண்களுக்கு முன்னாலை... வாளாலை என்ரை ரெண்டு பெடியளையும்... என்ரை குஞ்சுகள் ரெண்டையும் துடிக்கத் துடிக்க வெட்டினான்கள்! என்று கூறியவர் குமுறி அழுதார்.

முத்தம்மாகூட கலங்கிப் போனா; பழணியின் கண்களில் கண்ணீர் கருக்கட்டி நிறைந்தது. மயில்வாகனத்தாரின் நெஞ்சு கனத்தது! நன்றாகப் பழகி; பற்று வரவு வைத்து; வியாபாரத்தொடர்புகளை விருத்தி செய்துவந்த ஒரு குடும்பத்தின் அழிவின் கதையை; அந்தக் குடும்பத்தலைவரின் வாயாலேயே கேட்டறிந்து கொள்வது பெருத்ததோர் வேதனையை மயிலருக்குக் கொடுத்தது. அவர் மௌனியாகி வீட்டுக் கூரையை அண்ணாந்து பார்த்தபடி இருந்தார்.

அடிபட்ட குழந்தைபோல் ஆக்ரோசமாக விம்மி ஓய்ந்து; முகத்தைதுண்டால்துடைத்து தன்னைத் தானே தேற்றிக் கொண்டு கந்தையர் தனது சோகக் கதையைத் தொடர்கின்றார். முத்தம்மா முன்னுக்குவந்து கோப்பிப் பேணியை எடுத்து ஆதரவோடை அவருக்கு நீட்டினா. நடுங்குங்கரங்களால் அதை வாங்கிக் கொண்டவர் ஒரு முடறுகுடித்து விட்டு பேணியை மீண்டும் முக்காலியில் வைத்தார்.

நீண்டபெருமூச்சை உள்வாங்கி வெளியிட்டுக் கொண்ட மயில்வாகனத்தார் "அது சரி அண்ணை; இப்ப உங்கடை சம்சாரம் எங்கைஇருக்கிறா?" என்று ஒரு கேள்வியை கேட்டு வைத்தார்!

கந்தையர் மீண்டும் குமுறி அழத் தொடங்கினார்! முத்தமமாவுக்கு தனது கணவன் மேல் கோபம் வந்தது "இஞ்சேரப்பா கொஞ்சமும் அறிவில்லாமல் அவரைப் போட்டுக் குடையிறியள்! அவரை ஆறவிடுங்க பாப்பம்! உங்க உங்களுக்கு உதுகள் வந்தாத்தான் தெரியும்!" என்று மயிலரை அடக்குகிறார் மனைவி.

கந்தையர் மீண்டும் தன்னை தயார் படுத்திக் கொண்டு தொடர்கிறார். அவரின் வரண்டுபோன குரல் கரகரத்த ஒலிகளை எழுப்பியபடி வெளிப்படைகின்றது அழுகைக்கும் பேச்சுக்கும் இடைப்பட்ட ஒருதொனி கேட்போரின் இதயங்களை நெகிழ வைக்கின்றன! காடுகளில் பசிக்கும், களைப்பிற்கும் கண் தூக்கத்துக்கும் இடையே அவர்கள் பட்டுவந்த துன்பத் தொடர் கதை; வாழ்விழந்த ஓர் இனத்தின் வரலாற்று முக்கியம் பெற்ற பெருநடை, பத்து நாட்களுக்கு மேல் பயணம் செய்த பாவப்பட்ட அனுபவக் கதை; கந்தையரால் அங்கு முன்வைக்கப்படுகின்றது!

"ஒரு வழியாய் .. நாங்கள்.... பத்துநாள்காட்டுக்குள்ளாலை நடந்து முல்லைத்தீவுக்கு வந்தம். பிறகு அகதிமுகாம் வாழ்க்கை துவங்கியது! மனிசிக்கு...எழும்பி நடக்க முடியாதபடி வருத்தம்... படுக்கையிலை...பாயோடு பாயாய் விழுந்திட்டா! பிள்ளையளை நினைச்சு அழுது, குழறி, விசரிபோலை ஆகிட்டா! கண்ணுக்கு முன்னாலை பெத்த குஞ்சுகள் ரெண்டையும் வெட்டிப்போட்டால்... பெத்தவள் பொறுப்பாளோ?... விசரியாய் போனாள் பாவி! ஒரு நாள் காலமை பொம்பர் ரெண்டு வந்து... குண்டு போட்டுது... நாங்கள் இருந்த முகாமுக்கு மேலையும் ரெண்டு குண்டு விழுந்தது... அதுக்குள்ளை... அதுக்குள்ளை அம்பிட்டு... செத்தவையிலை... என்ரை... மனிசியும் ஒருத்தி...! "என்று விடாப்பிடியாக வில்லங்கப்பட்டு கூறி முடித்த கந்தையர்; தோளில் கிடந்த சால்வையின் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கி விம்மினார்!

துன்பங்களின் சங்கமத்தில் எழுந்து நின்ற திகைப்பு எல்லோரின் இதயங்களையும் இறுக அமுக்கியது! அங்கு நிலவிய வெகு நேர அமைதியை உடைத்து; இறுக்கமான பிடியிலிருந்து விடுபடும் நோக்கோடு மயில்வாகனத்தார் உரத்த குரலில்பேசத்தொடங்கினார்.

"தியாகங்களுக்கு அர்த்தம் உண்டு! ஒவ்வொரு நாளும் எத்தினை போராளியள் ஆண் பெண்ணெண்ட வித்தியாசம் இல்லாமல் போராடிச் சாகுதுகள்! உண்மையாய் கிழக்கு மாகாணம் அழிஞ்சுபோச்சுது! சிங்களவன் எப்பவோ திட்டம் போட்டவன்! கொஞ்சம் கொஞ்சமாய் எங்களை அழிச்சுவந்து; இப்ப முழுக்க அழிக்கிறன் எண்டு வெளிக்கிட்டிட்டான்! எங்கடை பெடியள் இருக்கும் வரை உது நடக்காது! பெடியள் விடான்கள்! பழிக்குப்பழி எடுப்பான்கள்! உந்த ஆமி எத்தினை வந்தாலும் எங்கடை பிள்ளையளுக்கு முன்னாலை எதிர் நிக்க ஏலுமே? அண்ணை.... கவலைப் படாதேயுங்கோ! ஏதோ நடந்து முடிஞ்சுது! உவன்களாலை வெறும் கையோடை நிக்கிற சனங்களைத்தான் கொல்ல முடியும்! அதுவும் நீடிக்காது கண்டீங்களோ! நாங்கள் சும்மாவே ரெண்டு ரெண்டு பவுண்கள் தூக்கிக் குடுத்தனாங்கள். இருந்து

[5ஆம் பக்கம் பார்க்க)

## அழைப்பின் துலங்கல்

டிக்... டிக் .. டிக்...
எலாம் வைத்த மணிக்கூடு
கணமும்
பீரங்கிக் குண்டென இடிக்கிறது
தூக்கமின்றித் துயிலும் ஊர்
இமைகள் திறக்காத விழிப்பில் நான்!

நடு நிசியிலும்
பிசாசுகளின அலைவுபோல்
பொம்மர்கள் திரியுது.
குடுகுடுப்பைக் காரனின்
புலம்பல் போலே
நாராயம் பூசிய ஓங்கார ரூபமாய்
உலங்கு வானூர்தி!

எந்த முகட்டில்
பொம்மர் குட்டுதோ,
எத்தனை முகங்கள்
நிணம் படுமோ,
எங்கு மரணம் நிகழும் இக்கணம்,
வினாக்கள் நூறு சுமந்துவரும்
பெருமூச்சு!

மண்ணுக்கடியில் உயிரின் முடிச்சை
மறைத்தது போதும்
உள்ளம் திருந்தி
எழுமின் எழுமின்
வாலியின் மணிமுடி வானில் இடித்ததுபோல்
எங்களின் தலைகள்
பொமமரின் முதுகில்
உரசுமளவும்
மனிதக் கம்பம் ஒன்று இணக்குவோம்!

ஆயிரம் ஆயிரம்
கரங்களுயர்த்தி
நாமே நமக்கோர் கருவியாவோம்
எழுந்து வா!

- தில்லையம்பலம் உதயசூரியன்

# தேசமே விழித்திருக்கிறது!

சூரியன் மறையும் போது இரத்தம் சிந்துகின்றதா? ஆம்! சூரியன் சிந்தும் இரத்தத்தால் வானம் சிவக்கின்றது. அதனால் மறுநாளும் வாழ்கின்றது எனக் கூறும் கவிஞர் இரும்பொறையின் இரண்டாவது கவிதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது, நமது நட்பின் இணைப்பு எங்கே? கவிஞர் இரும்பொறையை இந்த மண்ணுக்கு அறிமுகமாக்கும் அந்த உணர்வு எது?

விழுந்து. எழுந்து' ஓடிய
மதில்கள், தலைகள், ஏணிகள்
படுத்து எழும்பிய பாய்கள்
மலை உச்சியில் ஓலைக்
- கொட்டிலில்
உறைய வைத்த ஊதல்காற்று
போர்வைக்கு மேலாக கூரை
யால் விழுந்த
மழை நீர்ச் சொட்டு,
மந்தியை விரட்டிய
பறு நிறைந்த ஈயத்தட்டு
விடியலில் எழ அடிக்கும்
ஊதுகுழல்

இவைகளின் அடித்தளத்தில் இழையோடும் நட்பினால் இணைக்கப் படும் கவிஞர் இந்த மண்ணுக்குப் புதியவராகத் தோன்றவில்லை. இந்த மண்ணினதும், மக்களினதும் அபிலாஷைக்கு அந்நியமானவராக இல்லை என்பது நிச்சயம். பதுங்கு குழியினுள் சுரக்கும் பாச ஊற்றை சரியாகவே இனங் காட்டுகின்றார். அதனால்தான் நண்பரின் உயிரைக் காப்பாற்ற முடியாதபோதிலும் அவனது ஆயுதத்தையும் இலட்சியத்தையும் காப்பாற்றுவார்கள் அதன்மூலம் வாழ்க்கையில் அவனது கனவுகளைச் செயலாக்குவார்கள். விடுதலை இரத்தம் என்றும் விழலுக்குப் பாய்ந்து வீணாகி விடாது எனவும் வெற்றிக்கு முன்பாக ஓய்ந்து போய்விடாது எனவும் தெளிவாக வரையறுதுக்த் கூறுகின்றார்,

மூதாட்டி ஒளவையாரும், அன்னையார் தெரேசாவும், புளோரன்ஸ் நைட்டிங்கேலும் கணவனுக்கு கால் பிடித்து விடுவதையா உனக்குச் சுற்றுக் கொடுத்தார்கள்? என்ற கேள்வியில் பெண் விடுதலையின் அடிப்படையை கவிஞர் தொட்டுக் காட்டுகின்றார் சார் மன்னனின் அரண்மனையும், பாஸ்டில் சிறை உடைப்பும் பாடமாக இருக்கும் போது சமையலறையின் சுவர்கள் தகர்க்கப்பட முடியாதவையல்ல. ஆனால் புட்டுக்கும் சம்பலுக்கும் பாராட்டுப் பத்திரம் வாங்கி சாதனை படைக்க எண்ணும் மங்கையர் மனப்போக்கில் மாற்றம் வேண்டும் என்பதை தெளிவாகப் புரிய வைக்கும் கவிஞர்பாராட்டுக்கு உரியவரே.

**தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உழைத்து வருபவருமான கவிஞர் இரும்பொறை அவர்கள் சிலகாலம் தமிழீழப் பகுதிகளில் தங்கிநின்ற போது எழுதிய கவிதைகளின் தொகுப்பாக "மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால் தான் மறுநாளும் வாழ்கிறது" வெளிவந்துள்ளது. "வேள்வி" என்னும் முதலாவது கவிதைத் தொகுப்பைத் தொடர்ந்துவந்திருக்கும் இந்நூல் இந்த மண்ணில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தையும், மக்களையும் கவிஞர் எவ்வளவு தூரம் ஆழமாகப் புரிந்துள்ளார் என்பதனை எடுத்துக்காட்டும்.**

பசியின் நெருப்பும், மானச் சூடும், மூச்சின் வெக்கையும், உருக்கென நிமிர்ந்த எலும்பும் கூட ஆயுதமாகும், ஆதிக்கக்கோட்டை மதில்களை தூசெனத்தள்ளும், பீரங்கிகளைப் பிணமென ஒதுக்கி வரலாறு முன்னேறிச் செல்லும் என்றவாறாக ஈழப் போராட்டத்தின் நம்பிக்கை வலுவூட்டலில் கவிஞரின் சொற்கள் இதயத்தின் ஆழம் வரை ஊடுருவிப் பாய்பவை.

"அடிமையாய் வாழ்வதுவும்
ஆசையில் திரிவதுவும்
அஞ்சிச் சாவதுவும்
அவர்களோடு போகட்டும்''

ஆம்! பணக்காரனாக இருந்தாலும், அறிவாளியாய் ஆனாலும், அடிமை முத்திரை குத்தப்பட்ட அவலவாழ்வு மூத்த தலை முறையோடு போய் முடியட்டும். பால் வடியும் முகத்திலும் படைத்தனம் குடியேற வேண்டியது காலத்தின் கடமை, தாயை நேசிப்பதற்கு எப்படி மீசை முளைக்கத் தேவையில்லையோ அதே போல் தாய்நாட்டு விடுதலைப் போரில் குதிக்கவும் வயது ஒரு தடையல்ல "பாலகன் என்பதனால் பாசறை வாழ்க்கைக்கு உரியவனல்ல'' என்ற கருத்தை உடைத்து பிஞ்சுக் கரங்களுக்கும் வலுவேற்றும் போது கவிஞர் இரும்பொறை எமது தேசத்தின் மைந்தர்களில் ஒருவனாக ஆகிவிடுகிறார்

## இளையவன்

இந்த மண்ணில் இருக்கின்ற எல்லாமே விடுதலைப்பணியை இயற்றும். அது எப்படிச் சாத்தியம் என்கிறீர்களா? கடமை நேரத்தில் புலிவீரர் கண்ணயர்ந்து விடாமல் சிற்றெறும்புக்கடிக்கும். களைதீர்க்கும் வகையில் மரங்கள் நிழல் கொடுக்கும், இலைகள் விசிறி விடும். இப்படியாக ஒவ்வொன்றும் விடுதலைப் போரில் தத்தம் பங்குக்கு பாடுபடும் எனவும் விடியலுக்காக இந்தத் தேசம் முழுவதும் எப்படி விழித்திருக்கிறது எனவும் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்.

"சாதிமத இழிவையும்
உயர்வு தாழ்வையும்
ஏற்ற இறக்கங்களையும்
மூடத் தனங்களையும்
கையில் பூட்டிய
அடிமைச் சங்கிலியையும்''

இன்றைய சந்ததி இனியும் சுமந்து செல்லாது. புதிய மானுடம் ஒன்றை ஆக்கிப் படைக்க அணிவகுத்து முன்னேறும் படையின ஊக்க மாத்திரைகளில் ஒன்றாக இந்தக் கவிதைத் தொகுதி நிச்சயம் விளங்கும்.

## இரட்டை நாக்கு...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாருங்கோ நாளைக்கு மேலாலை பறந்து சண்டித்தனம் விடுகிறவைஎல்லாரும்; சும்மா தொப்பு தொப்பெண்டு விழப் போகினம்! அப்பத்தான் விளங்கும் எங்கடை பெடியளின்ரை திறமை! இஞ்சை கண்டீங்களோ எங்களுக்கு ஒரு பயமும் இல்லை. பெடியள் இரவு பகல் எண்டு பாராமல்; பனி மழையெண்டு பாராமல் விழிப்பாய்த் தான் நிக்கிறான்கள்! எங்கை ஆமி எண்டவை ஒருக்கா வந்து பாக்கட்டுக்கும்?'' என்று சவால் ஒன்று விட்டபடி மயிலர் வெற்றிலையை முழுதாய் எடுத்து மடக்கி வாய்க்குள் அடைந்து கொள்ளுகின்றார். முத்தம்மா தனது குரலை சற்று மென்மையாக்கியபடி அப்ப பாருங்கோ... நீங்கள் இப்ப எங்கை தங்கி இருக்கிறியள்?'' என்று ஒருகேள்வியைக் கேட்டு வைக்கிறா. அவர் தான் சாவகச்சேரியில் தனது மனைவியின் உறவினர் வீட்டில் இருப்பதாகவும் கையில் ஒருசதக காசும் இல்லாதபடியால் இந்தப் பக்கம் வந்ததாகவும் கூறவே மயிலர்தனது கணக்குப் புத்தகத்தைக் கொண்டு வந்து பிரித்துப் படிக்கிறார்.

"நீங்கள் கடைசியாய் வவுனியா மில்லுக்கு அனுப்பின நெல்லுவகையால நான பதினையாயிரம் தருமதி இருக்கு. ஆனால் பாருங்கோ! அங்கை மில் ஆமியிட்டை அகப்பட்டிட்டு. இருக்குதோ எரிச்சிட்டான்களோ தெரியாது! இஞ்சை பண்ணையிலை கோழித்தீன்இல்லாமல் கோழி எல்லாம் செத்துப் போச்சுது; முந்திரிகைப் பழமும் அனுப்புமதி இல்லாமல் நட்டமாய் போச்சுது; பெரிய கடைபக்கம் போறதில்லை! கையிலை மடியிலை ஒண்டும் இல்லை, எல்லாம் ஆறுதலாய்ப் பாப்பம்..." என்று கூறி விட்டு வீட்டுக்குள் சென்று திரும்பி வந்து இரண்டு ஐந்நூறுரூபா நோட்டுகளை அவரிடம் நீட்டுகிறார்

'இது தான் கண்டியளோ கிடந்தது. கொண்டு போங்கோ பிறகு எல்லாம் வெல்லுவம்!'' என்று கண்ணை சிமிட்டிக் கொண்டு மயில்வாகனத்தார் தனது இருக்கையில் அமர்ந்து கொள்ளுகின்றார்.

நெடுமூச்சோடு அந்த ஆயிரம் ரூபாவையும் கந்தையர் பெற்றுக் கொண்டு, அவற்றை தனது சேட் பொக்கற்றுள் திணிக்கிறார்.

கூட்டுக்குள் நிற்கும் அல்சேசியன் நாய் அட்டகாசமாய் குலைக்கவே பழணி எட்டிப் பார்க்கின்றான் ஆட்களை இனங்கண்டு கொண்டவன்; கேற்பக்கம் செல்கின்றான்.

வெற்றிலையைக் குதப்பி அனுபவித்தபடி மயிலர் கூறுகிறார். "அண்ணே! திருக்கணாமலையை இனி நினைக்க ஏலாது! ஏதோ நடக்கிறதெல்லாம் நடந்து முடிஞ்சுது! தைரியமாய் இருங்கோ! இங்கினை ஏதும் துவங்குவம்! பெடியள் ..., அந்த மாவீரன்கள் தங்கடை உசிருகளைக் குடுத்து கோட்டையை மீட்டிட்டாங்கள்! இனிப்பிரச்சினை இல்லை! பெரிய கடையுக்கை இனி நம்பி முதல்போடலாம் ...'' அவரின் கதை முடியுமுன் வாசிகசாலைப் பெடியள் நான்குபேர் பழணியோடு வந்து அவர் முன் நிற்கிறார்கள்.

"முதலாளி ஐயா மன்னிக்க வேணும்! நாஙகள் எங்கடை சந்தியிலை மாவீரர் தினத்துக்கு வளைவு ஒண்டு வலு பெரிசாய் அமைக்கப்போறம்.. அதுதான் நிதி உதவி கேட்டு வந்திருக்கிறம்!'' என்று வந்தவர்களுள் ஒருவர் மயில்வாகனத்தாரைப் பார்த்து மரியாதை கூடாமல் விடச் சொல்லி முடிக்கிறார்.

மயிலரின் கரியமுகம் மேலும் கருமை அடைகிறது! "என்ன கண்டறியாத வளைவும் அலங்காரங்களும்? பொம்பரடி இப்ப இந்தப் பகுதியிலை கொஞ்சமகுறைஞ்சு கிடக்குது! உதுகளைக்கண்டால் சும்மா விடுவான்களோ? அதுபோக தம்பிமாரே நீங்கள் விளையாட்டுப் பெடியள் கண்டியளோ!... உங்களுக்கு நாங்கள் பட்டிருக்கிற நஷ்டங்கள் தெரியாது! அண்டைக்குத் தான் ரெண்டுபவுணை தூக்கிக்குடுத்துட்டு நிக்கிறன். பிறகும ஒரு மனச்சாட்சி இல்லாமல் காசு ...காசு எண்டு வாறியள்! தம்பிமாரே! நீங்கள் கோவிச்சாலும் கோவியுங்கோ... நான் ஒரு சதமும் உதுக்குத் தரமாட்டன்...'' என்று அவர் உறுதியோடு கூறி முடிக்கவும், கந்தையா வீறாப்போடு எழுந்தார்!

இந்தாருங்கோ....! என்று தனது பையில் இருந்த இரண்டு ஐந்நூறு ரூபா நோட்டில் ஒன்றை எடுத்து பெடியளிடம் கொடுத்துவிட்டு; வீறாப்போடு வெளியேறுகிறார் திருமலைக் கந்தையர்.

[யாவும் கற்பனை]

# தி. மு. க. அரசு கலைப்பு

தி. மு. க. வின் வரவு செலவுத் திட்டத்தில் பல நல்ல அம்சங்கள் இடம் பெற உள்ளன. அதற்கு முன் தமிழ் நாடு அரசைக் கலைக்க வேண்டும். — இப்படிக் கோரியது இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு அரசைக் கலைக்காவிட்டால் மத்திய அரசுக்கான தனது ஆதரவை வாபஸ் பெறப் போவதாகச் செல்வி ஜெயலலிதா நாகாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அமெரிக்க போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்ப அனுமதி வழங்கியதையடுத்து, சந்திரசேகருக்கு, இ. காங்கிரஸ், தேசிய முன்னணி, மற்றும் இடதுசாரி வட்டாரங்களில் பாரிய எதிர்ப்புஉண்டாகியது. இந்தச் சலசலப்பில் தமிழக அரசைக் காப்பாற்றுவதை விடத் தன்னைக் காப்பாற்றவே சந்திரசேகர் விரும்பினார்.

### 21ஆம் திகதி இரவு

தமிழக அரசைக் கலைப்பதற்குத் தேவையான வழிவகைகளை மேற்கொள்ளும்படி சந்திரசேகர் 27ஆம்திகதி உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டார். இதன் விளைவு — திடீரென்று 29ஆம் திகதி இரவு 10-30 மணி போல் உடனடியாக டெல்லிக்கு வரும்படி தமிழக ஆளுநர் பர்னாலாவுக்கு பணிப்புரை வந்தது. சென்னையில் இயங்கும் மத்திய உளவுத் துறை மூலமே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டது.

டெல்லியில் தமிழ்நாடு இல்லத்தில் பர்னாலா தங்கியிருந்தார். தி. மு. க. ஆட்சியைக் கலைப்பதற்கான குற்றச்சாட்டுகள் அடங்கிய ஆவணத்தில் கையெழுத்திடும்படி பர்னாலாவை மத்திய உள்துறைத்துணை மந்திரி நிர்ப்பந்தித்தார். பர்னாலா கையெழுத்திட அறவே மறுத்து விட்டார்.

அடுத்தாற்போல, பிரதமர்-பர்னாலா சந்திப்பு நடந்தது. தமிழ் நாடு பற்றி 'றோ' (Raw) தயாரித்த அறிக்கைகள் பர்னாலாவுக்குக் காட்டப்பட்டன. அதிலெல்லாம் உண்மையில்லை, தமிழ் நாட்டில் சாலை மறியல் போராட்டத்தில் கூட சட்டமும் ஒழுங்கும் குழம்பவில்லை என்ற கருத்தைப் பர்னாலா பிரதமர் சந்திரசேகரிடம் வற்புறுத்தியுள்ளார்.

## திரைமறைவுச் சங்கதிகள்

தமிழ் நாடு இல்லத்துக்குத் திரும்பியபர்னாலாவுக்குதி மு. க. ஆட்சிக்கவிழ்ப்பு உறுதியாகிவிட்டது. தமிழ்நாடு இல்லத்தில் பணிபுரியும் ஆணை இயக்குநர் சம்பத் மூலம் இந்தச் செய்தி கருணாநிதிக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்போது வரவு-செலவுத் திட்டம்பற்றிக் கருணாநிதி கபிலனுடன் ஆலோசனை கலந்து கொண்டிருந்தார். சம்பத்திடமிருந்து தகவல் தொலைபேசியில் வந்ததும், கூட்டம்

## மதன்

இடைநடுவில் கலைந்தது அலுவலகம் சென்ற செய்தியாளரிடம், "உங்களுக்கெல்லாம் சந்தோஷம்தானே?'' என்று அதிகாரிகள் கோபமாகக் கேட்டார்களாம்.

### 30ஆம் திகதி பிற்பகல்

பர்னாலாவின் மனம் மாறவில்லை. மத்திய அரசின் உள்துறை அதிகாரிகள் மீளவும் பர்னாலாவைச் சந்தித்தனர் சுமார் இரண்டு மணிக்கு டெல்கியில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தி. மு. க. அரசைக் கலைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது. மாலை நான்கு மணியளவில் மத்தியஉள்துறையின் மேலதிக செயலர் பக்ஷி, தஸ்தாவேஜுக்கள் அடங்கிய கோவையுடன் பர்னாலாவைப் பார்க்க தமிழக இல்லத்துக்கு வந்தார். ஓய்வெடுப்பதாகச் சொல்லி பர்னாலா பக்ஷியைச் சந்திக்க மறுத்து விட்டார். கடைசியில் பிரதமர் அமைச்சரவைச் செயலர் "பக்ஷியை எப்பேற்பட்டாவது பர்னாலாவைச் சந்திக்க வையுங்கள்'' என்று தமிழ் நாடு இல்லப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவு போட்டார். கடைசியில் 5-15மணியளவில் பக்ஷி பர்னாலாவைச் சந்தித்தார். 15 நிமிடங்கள் வரை பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. பர்னாலா கையெழுத்திட மறுத்து விட்டார். ஒன்றும் செய்ய முடியாத நிலையில். தானாக வரவழைத்த ஒரு புன்னகையுடன் பக்ஷி வெளியேறவே, மத்திய அரசின் தஸ்தாவேஜுகளில் பர்னாலா ஒப்பம் வைத்து விட்டார் என்றொரு மாயை ஏற்பட்டது.

பர்னாலாவைப் பல வழிகளில் மத்திய அரசு நிர்ப்பந்தித்ததாம். கவர்னர் பதவியிலிருந்து நீக்கப்படலாம். பஞ்சாப் தீவிரவாதிகள் கொலைப் பட்டியலில் உங்கள் பெயரும் இருக்கிறது. கவர்னர் பதவியில்லாது போனால் பாதுகாப்பு வழங்கப் படாது என்றெல்லாம் பர்னாலாமிரட்டப்பட்டாராம். நயவஞ்சகமான இந்த முயற்சிகளுக்கெல்லாம் பர்னாலா மசியவில்லை.

பர்னாலா சென்னைதிரும்ப முடிவெடுத்தார். அவருடைய விமானம் தாமதம் செய்யப் பட்டது. விமானத்திலும் கூடஅவரை விட்டபாடில்லை. விமானத்தில் கூட அதிகாரிகள் அவரை வற்புறுத்தினார்கள். பர்னாலா விட்டுக் கொடுக்கவில்லை. விமானம் சென்னை மீனம்பாக்கமஇறங்குதரையில் இறங்கியது. விமானத்திலிருந்து இறங்கிய பர்னாலா செய்தியாளரைச் சந்திக்காமல் காரில் ஏறிப் போய்விட்டார். கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகைக்கு வந்த பர்னாலா, "நான் மனச்சாட்சியுடன் நடந்து கொண்டேன். என் ஒப்புதல் இன்றியே கலைக்கும் வேலைகள் டெல்லியில் நடக்கின்றன'' என்று கலைஞர் கருணாநிதிக்குத் தொலைபேசியில் சொன்னார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# தலைவனைப் பாடிடும் நேரம்!

சுந்தரத் தமிழால் கவிபாடும்
செந்தமிழ்க் கவிகாள் கலைஞர்காள்
வந்தனம் கூறி அழைக்கின்றேன்
எந் தமிழ் மக்கள் இடர் நீங்க
பைந்தமிழ் மொழியால் பாடுங்கள்!

ஆண்டாண்டு தோறும் அடிமையாய் வாழ்ந்தனம்
வேண்டாமினியது விழித்திடப் பாடுங்கள்
தூண்டுங்கள் தமிழரை துணிந்து போராடிட
வேண்டாத விதிகளை வீழ்த்திடப் பாடுங்கள்!

போரை புலிவீரரைப் பாடுங்கள்
மாவீரரை மறவரைப் பாடுங்கள்
அடிமை நிலையின் அவலம் பாடுங்கள்
குடியின், கொள்ளையின் கொலையின் கொடுமை
பாடுங்கள்!

பெண் புலிகளின் வீரம் பாடுங்கள்
பெண்ணடிமை நீங்கிடப் பாடுங்கள்
வாய்மையின் மேன்மையைப் பாடுங்கள்
பொய்மை பொசுங்கிடப் பாடுங்கள்

சமூகநீதி தளைத்திடப் பாடுங்கள் சமத்துவம்
பாடுங்கள்

சதிகாரர்கள் வீழ்ந்திடப் பாடுங்கள்
ஏழ்மை ஒழிந்திட, ஏற்றம் பெற்று
எல்லோரும் எல்லாம் எய்திடப் பாடுங்கள்

வேற்று மனிதர்களை, விலங்குகளை, பறவைகளை
காற்றை, கடலலையை, கடவுளை, கானகத்தை
காதலைப் பாடிடும் நேரமல்ல நம்
காதல் தலைவனைப் பாடிடும் நேரம்!

- தமிழேந்தி

## தென் ஆசியப் பெண் பிரதமர்கள்

தென் ஆசியாவில் ஏழு நாடுகள் உள்ளன. இதில் முதன்மையான நான்கு நாடுகளில் பெண் பிரதமர்கள் ஆட்சி புரிந்தார்கள். ஆனால் பெண் விடுதலை பற்றிப் பேசும் மேற்கத்தேசத்தில் இன்று பெண் பிரதமர் ஆட்சியில் இல்லை. தென் ஆசியப் பிராந்திய பிரதமர்களில் பங்களாதேஷ் பிரதமர் தவிர்ந்த ஏனையோர்களில் இலங்கைப் பிரதமர் கணவருக்குப் பின்னரும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி பாகிஸ்தானியப் பிரதமர் பெனாசிர் பூட்டோ ஆகியோர் தகப்பனுக்குப் பின்னரும் பிரதமர் பதவிக்கு வந்தனர். இவர்கள் முதலாவதாக பதவியேற்ற ஆண்டுகள் வருமாறு:-

1 இலங்கைப் பிரதமர் - திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1960 ஆம் ஆண்டு

2. இந்தியப் பிரதமர் - திருமதி. இந்திராகாந்தி 1966 ஆம் ஆண்டு

3. பாகிஸ்தானியப் பிரதமர் திருமதி. பெனாசிர் பூட்டோ 1988 ஆம் ஆண்டு.

4. பங்களாதேஷ் பிரதமர் பேகம் ஹலிதா சியா 1991 ஆம் ஆண்டு

- உமா

## மாதா நிலையறியா மழலைகள்!

சிட்னி,

தமது தாய் இறந்துகிடந்ததை அறியாத இரு பிள்ளைகள் எட்டுநாட்களாக பிஸ்கட் வாங்கி உண்டு பாடசாலைக்கும் வழமைபோல் சென்று வந்துள்ளனர்.

ஏழுவயது, ஒன்பதுவயதுள்ள இச்சிறுவர்கள் சிட்னியில் வசிப்பவர்கள் தமது தாய் சுகவீனமுற்று படுத்திருக்கிறார் என்று நினைத்து பாடசாலைக்கும் சென்று வந்துள்ளனர்.

## தி.மு.க. ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிட்டத்தட்ட அதே வேளையில் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தமிழ் நாடு ஆட்சிக் கவிழ்ப்புக்கான உத்தரவில் ஒப்பம் வைத்தார். வெங்கட்ராமனும் கடைசிவரை தாமதம் செய்து விருப்பமில்லாமலேயே ஒப்புதல் வழங்கியதாக டெல்லி அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

### 31ஆம் திகதி

காலையில் ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் கருணாநிதி வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டார். கருணாநிதிபேசமறுத்துவிட்டார். "இனி என்ன பேச இருக்கிறது? ஏதாவது சமாதானம் சொல்வார் " என்று கருணாநிதி பக்கத்திலிருந்தவர்களிடம் கூறினாராம்.

பர்னாலா தான் ராஜினாமாச் செய்வதா இல்லையா என்ற மனப்போராட்டத்தில் இருந்தார். காலையில் அதிகாரிகளுடன் நடத்த இருந்த கூட்டத்தைப் பிற்பகல் 2மணிக்கு ஒத்தி வைத்தார். பின்பு அதுவும் ரத்துச் செய்யப்பட்டது. பி.ப 3.30 மணியளவில் கருணாநிதி பர்னாலாவைச் சந்தித்தார் அது ஒரு உணர்ச்சிகரமான சந்திப்பு!

தி மு. க ஆளுநரை டெல்லியின் ஏஜென்ட் என்று வர்ணிப்பதுதான் வழக்கம். "ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு கவர்னரும் எதற்கு?" என்பது தி மு. கவின் கருத்து. முதல் முறையாக தி.மு க பஞ்சாபியரும், தாடிக்காரனுமாகிய ஒரு ஆளுநரை அன்புடன் பார்க்கிறது.

ஆளுநரின் அறிக்கை இல்லாமல் இந்திய அரசியல் யாப்பின் 356 ஷரத்துப்படி மாநிலத்தில் ஆட்சிகளை மத்திய அரசு கலைக்கலாம் என்று பிரதமர் சந்திரசேகர் நியாயப்படுத்த முயன்ற பின்னணியில் நடந்தது இதுதான்.


# 3 ஆம் வருட நினைவு நாட்கள்



மக்களின் விடுதலைக்காக தன்னுயிர் அர்ப்பணித்த
அன்னை
பூபதிக்கு
எம் இதய
அஞ்சலிகள்!

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE,
d BASE III+ LOTUS 1 2-3,
WORD PROCESSING ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

★ தமிழ் மாணவர்களின் நன்மை கருதி தமிழ் விளக்கங்களுடன் கற்பிக்கப்படுகின்றன.

★ தமிழ் பிரதேசத்தின் தனித்துவமிக்க கம்பியூட்டர் கல்வி நிறுவனம்.

UNIKCO
COMPUTER CENTRE
No: 37, Clock Tower Road, JAFFNA.

(வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாகவுள்ள மேல் மாடியில்)

(B- 2184)



யாழ். இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# ஆண்டுப் பொதுக் கூட்டம்

யாழ். இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் 02 04-1991 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரவும்.

உறுப்புரிமையை உறுதிப்படுத்த 1991 ஆம் ஆண்டுச் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டை தவறாது எடுத்து வருமாறு வேண்டப்படுகின்றனர்.

கல்லூரி அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகள் 25-03-1991 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

க. சி. குகதாசன்
தலைவர் / அதிபர்.

க. பூபாலசிங்கம்
செயலர்

(B- 2176)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
21
01
1933



மறைவு
20
02
1991

உயர்திரு.
## த. இராசலிங்கம்

B.A. (Econ); M. A; Dip-in-Ed;
ex - S. L. E. S; ex - M. P.
Fellowship in Educational Planning and Administration (A. I. E. P. A.) New Delhi
(Unesco Sponsored)

திங்களொன்று தேய்ந்தென்ன
தினம் யுகமாய்ச் சென்றென்ன
எங்களில்லப் பேரொளியே
இதயமெலாம் நிறைந்தாயே!
உங்கள் சேவை உருவெடுத்து
உயிரூட்டிக் காட்டுதையா
மங்காத நின் புகழின்
மணம் வீசிப் பரவுதையா!
பேராற்றல் கல்வி தனில்
சிறந்த மண்ணின் பேர் இலங்க
பாராளும் உறுப்பினனாய்ப்
பார்புகழ ஓங்கி நின்றாய்!
ஊரூராய் உனை எண்ணி
உருகி நின்றோர் எத்தனைபேர்
போராளா பெருந் தகையே
பேரொளியே நினைக்கின்றோம்!

"ராஜ்ஹாக்"
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

— குடும்பத்தினர்

(R- 1194)



# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
14 - 03 - 1954

வீரமரணம்
22 - 03 - 987

லெப்ரினன்ட்
சஞ்சீவி (மீசை)



செல்லப்பா கங்காதரன்
[8ஆம் கட்டை, மல்லாகம்]

"பார்போற்றும் தமிழினத்தின்
பழி துடைக்கப் புறப்பட்ட
இள வேங்கையே!
வீரர் குலவிளக்கே!
மண் மீட்க மரித்தவனே எம்
மனங்களில் நிலைத்தவனே;
மறுமை ஈழத்திலே
மணம் வீசித் திகழ்ந்திருப்பாய்

பெற்றார், சகோதரர்கள், மைத்துனர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

மல்லாகம்:

(R- 1189)

# ஈராக்கின் எதிர்காலம்; மேற்காசியாவில் மேலும் ஒரு லெபனான்

வளைகுடாப் போரில் ஈராக்கிற்கு ஏற்பட்ட தோல்வி ஈராக்கின் பெரும் உள்நாட்டுக் கிளர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. ஈராக்கில் முதரப்பினருக்கிடையே உள்நாட்டுக் கிளர்ச்சியின் காரணமாக பலமான மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன. ஈராக்கின் வட பாகத்தில் துருக்கியின் எல்லையை அண்டியுள்ள குர்திஷ் இனப் போராளிகள் ஈராக பலவீனப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்கென ஒரு நாட்டை நிர்மாணித்துக் கொள்ள முற்பட்டுள்ளார்கள். அதேவேளை ஈராக்கின் தென் பகுதியில் பெரும்பான்மையினராக வாழும் ஷியா முஸ்லிம் பிரிவினர் ஈராக்கில் ஒரு இஸ்லாமிய அடிப்படை வாத ஆட்சியை உருவாக்க முற்பட்டுள்ளார்கள். அத்தோடு ஈராக்கிற்கு வெளியிலுள்ள சதாம் ஹுசைன் எதிர்ப்புக் குழுக்கள் சகலரும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முதலில் சதாம் ஹுசையினைப் பதவியில் இருந்து இறக்கிவிட வேண்டுமென்ற நோக்கில் செயற்படுகின்றன.

ஈராக்கில் 15.5 வீதம் அளவில் குர்திஷ் இனமக்கள் வாழ்கின்றார்கள். ஈராக்கின் வடக்கு எல்லைப்பிரதேசத்தை அண்டி ஏறத்தாள 16 000 சதுரமையில் பிரதேசத்தில் ஒரு குர்திஷ் தனி அரசு அமைப்பது அவர்களின் நோக்கமாகும். தற்பொழுது இவர்களுக்கு போராட்ட ஆதரவாக துருக்கி பின்னணியில் இருக்கின்றது. முன்னர் குர்திஷ் இன மக்களை தமது நிலப்பரப்பினுள் அகதிகளாக ஏற்றுக்கொண்ட துருக்கி போராளிகளுக்கு ஆதரவு எதையும் வழங்கவில்லை; போராளிகள் துருக்கிற்கு வருவதைத் தடை செய்தே வந்துள்ளது; ஆனால் இம்முறை துருக்கிய அதிபர் குர்திஷ் இனப் போராளிகளை நேரடியாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதோடு ஆதரவும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியசனத்தொகையில் சுமார் 81 வீதத்திற்கு மேல் அரபுக்களாக இருந்தாலும், அதில் 50 வீதத்திற்கு மேல் ஷியா முஸ்லிம் ஆவர். மிகுதியினர் சுனி முஸ்லிம் ஆவர் ஆனால் பாக்தாத்தில் தொடர்ச்சியாக சுனி முஸ்லிமைச் சேர்ந்தவர்களே ஆட்சியில் இருந்து வருகின்றனர். இந்நிலையில் ஷியா முஸ்லிம் பிரிவினர் ஈராக்கில் ஆட்சியினைக் கைப்பற்றுவதிலும் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சி ஒன்று அங்கு அமைக்கப்பட வேண்டும் என்பதிலும் அக்கறையாக உள்ளனர் இவர்களுக்கு ஷியா முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஈரானின் ஆதரவு உண்டு ஈரான் அரசாங்கம் வெளிப்படையாக தான் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை எனக் கூறிவந்தாலும் கடந்த எட்டு ஆண்டுப் போர் வஞ்சத்தை ஈரான் தற்பொழுது தீர்த்துக் கொள்ளப் பார்க்கின்றது போல தெரிகின்றது.

இதனை உறுதிப்படுத்துமாப் போல ஈராக்கில் ஒரு இஸ்லாமிய அடிப்படையிலான ஆட்சி அமையவேண்டும் என ஈரானிய ஜனாதிபதி ஆய்தொல்லா ஹுமினியின் அறிவிப்பு உள்ளது. ஈராக்குப் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆயுதம் கொடுத்து பெருமளவில் ஈராக்கிற்குள் அவர்களை அனுப்பியுள்ளது எனவும் ஈராக் குற்றம்சாட்டியுள்ளது ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் தனது ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சிகள் யாவற்றையும் நாட்டை விட்டுத் துரத்தியடித்தார். அவ்வாறு துரத்தியடிக்கப்பட்ட எதிர்க்கட்சி அமைப்புக்கள் இருபத்திமூன்றிற்கு மேற்பட்டவையாகும்; அவை தற்பொழுது சிரியாவிலும், லெபனானிலும் செயற்பட்டு வருகின்றன. இந்த அமைப்புக்களின் 350 'தலைவர்கள்' கடந்தவாரம் டமஸ்கஸில் கூடி தமக்குள் சில முடிவுகளை எடுத்துக் கொண்டார்கள். இதன் பிரகாரம் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து இறக்குவதற்கு சகலரும் ஒன்று சேர்ந்து போராடுவதென்பது கூட்டத்தின் பிரதானமான தீர்மானமாகும்;

அமெரிக்காவிற்கு ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து துரத்தியடித்தல் அல்லது கொலை செய்யும் நோக்கம் இருந்தது! ஆனால் போரின் போது பாக்தாத் வரை சென்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவின் கூட்டாளிகள் பெரும்பாலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவில்லை. அத்தோடு ஐக்கிய நாடுகளின் அங்கீகாரமும்

> சதாமை பாக்தாத் வரை சென்று வீழ்த்த முடியாது. அதற்குக் கூட்டாளிகள் தயாராக இல்லை ஐ. நா. வின் அனுமதியும் இல்லை. வீழ்த்தியதன் பின் நியமிக்க அமெரிக்க சார்பு தலைமையும் இல்லை. இந்நிலையிலேயே 'மக்கள் தீர்மானிக்கட்டும்' என உள்நாட்டுக் கிளர்ச்சிக்கு அமெரிக்கா வழி செய்தது.

இந்நிலையில்தான் ஈராக்கில் உள்நாட்டுப் போர் தொடர்கின்றது ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவுப் படைகள் கிளர்ச்சிக்காரர்களுடன் பல முனைகளில் தீவிரமாக போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். கிளர்ச்சியை அடக்க அரசபடைகள் மிகவும் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உள்நாட்டுப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது: தெற்கு ஈராக்கிலும், வடக்கு ஈராக்கிலும் பல நகரங்களை கிளர்ச்சியாளர் கைப்பற்றியதாகவும் பல பகுதிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாகவும் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளார்கள்: ஆனால், கிளர்ச்சியை அரசபடைகள் முறியடித்து வருவதாக ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வளைகுடாப்போரை அமெரிக்கா முடிவிற்குக் கொண்டு வந்தபோது ஏறத்தாழ ஈராக்கின் 15வீத நிலப்பரப்பு அமெரிக்காவின் வசம் இருந்தது போரின் ஆரம்பத்திலிருந்தே

அதற்கு இல்லை: சர்வதேச கண்டனங்களுக்கும் உள்ளடக்கக் கூடிய விடயமாகும்: இந்நிலையிலேயே ஈராக் அரசாங்கத்தைக் கைப்பற்றி சதாம் ஹுசைனை விரட்டும் நடவடிக்கையை இடைவெளியில் அமெரிக்கா நிறுத்திக்கொண்டது.

இவ்வாறு நிறுத்திக்கொள்வதற்கு மேலும் ஒரு காரணம் இருந்து அதிபர் சதாம் ஹுசைனை விரட்டிவிட்டு ஒரு புதிய ஆட்சியாளரை ஈராக்கிற்கு நியமிப்பதற்குப் பொருத்தமான ஒரு ஆட்சியாளர் அமெரிக்கத் தரப்பில் இருக்காமையாகும். அதாவது சதாம் ஹுசைனை விரட்டிவிட்டாலும் அமெரிக்காவை முழுமையாக ஆதரிக்கும் ஒரு ஈராக்கியத் தலைவர் அமெரிக்கா தரப்பில் கிடைக்கவில்லை என்றே சொல்லாம் சதாம் ஹுசைன் எதிர் கிளர்ச்சியாளர்கள்பெரும்பாலும் ஷியா முஸ்லிம்களாகவும் குர்திஷ் இனத்தவர்களாகவுமே இருந்தார்கள். இவர்களில் எவரையும் அமெரிக்காவினால் ஆட்சியில் அமர்த்த முடியாது இதனை அமெரிக்கா சார்பு அரபு நாடுகளே ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதாவது குர்திஷ் இனம் சிறுபான்மை இனம். அத்தலைவர்கள் ஈராக்கை ஆள முடியாது. அதேவேளை ஷியா முஸ்லிம் பிரிவினர் அடிப்படை இஸ்லாமிய மதக் கோட்பாட்டாளர்கள். இவர்கள் ஆள்வது ஏனைய அமெரிக்க சார்பு அரபுக்களுக்குப் பிடிக்காததோடு ஈரானிய சார்பு உள்ளவர்கள் ஆகையினால் அமெரிக்க நலனுக்கு பங்கம் விளைவிப்பதாக அமைந்து விடும்;

இந்த நிலையில்தான் ஈராக்கின் ஆட்சி மாற்றத்தில் அமெரிக்கா தான் நேரடியாகத் தலையிடாமல் போரில் தோல்வியுற்ற அரசாங்கத்தின் மீது இராஜதந்திர அழுத்தங்களையும் இராணுவ அழுத்தங்களையும் மறைமுகமாகக் கொடுத்து சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து துரத்த முற்பட்டுள்ளார்கள்; ஈராக்கை யார் ஆளவேண்டும் என்பது ஈராக்கிய மக்களின் முடிவு: ஆனால் சதாம் ஹுசைன் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதை அமெரிக்கா விரும்பவில்லை என அமெரிக்கத் தலைவர்களின் கூற்றுக்களே இவற்றைத் தெளிவாக நிரூபிக்கின்றன;

இந்நிலையில் தான் ஈராக்கின் இன்று உள்நாட்டுப்போர் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்போர் இனி ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து நீக்கப்பட்டாலும் உடன் நின்றுவிடப்போவதில்லை இப்போர் தொடர்ந்து கொண்டிருப்பதற்கான முரண்பாடுகள் போதிய அளவில் உள்ளன. ஆகையினால் ஈராக் ஸ்திரத்தன்மை பெற நீண்டகாலம் செல்லலாம்;

சுருக்கமாகக் கூறின், ஈராக் கிற்கெதிரான அமெரிக்காவின் போர் நடவடிக்கை மேற்காசியாவில் மேலும் ஓர் புதிய லெபனானை உருவாக்கியுள்ளது. இன்று லெபனானில் உள்ளது போன்று பல்வேறு நாட்டு படையினரும் பல நாட்டு ஆதரவு ஆயுதக்குழுக்களும் உள்ளன. அவை அடிக்கடி மோதிக் கொள்வதும் உண்டு.

**ஜெயா**

இந்நிலை இன்று ஈராக்கிலும் உருவாகி வருகின்றது: ஈராக்கை சுற்றியுள்ள அண்டை நாடுகளும், உலக வல்லரசுகளும் தமது தகுதிக்கும். பலத்திற்கும் ஏற்ப ஒவ்வொரு ஆயுதக் குழுக்களை அல்லது இராணுவத்தை ஈராக்கில் வைத்துக் கொள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## "மிதக்கும் தீவுகள்"

"மிதக்கும் தீவுகள்" என்பது சோவியத் யூனியனின் தொழில் நுட்ப விஞ்ஞான கட்டிடக் கலை வல்லுநர்களால் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க மேற் கொள்ளப்பட்ட நவீன திட்டம் ஒன்றாகும்.

இவற்றில் சோவியத் யூனியனின் மாநிலங்களில் ஒன்றான ஜோர்ஜியா இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வந்தது.

இந்த வகையில் சோவியத் யூனியனின் நிபுணர்களால் இரண்டு திட்டங்கள் இதுவரை வரையப்பட்டுள்ளன

முதலாவதில் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக ஐந்து மாடிக்கட்டிடங்கள் கட்டப்படும் இதில் 15 000 முதல் 30,000 வரையான மக்கள் வாழக் கூடிய வகையில் இந்த மிதக்கும் தீவுகள் அமையும்.

இரண்டாவதில் இந்த மிதக்கும் தீவுகள் எகிப்தில் உள்ள பிரமிட் மாதிரி கூம்பு வடிவத்தில் அமைந்திருக்கும் 50,000 மக்கள்வரை இதில் வாழலாம்.

இந்த இரு திட்டங்களும் கருங்கடலின் கிழக்குப் பகுதியில் அமைக்க ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்தத் தீவுகளுக்கு சகல அடிப்படை வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்படும்; குடிநீர், கடல்நீரை சுத்திகரித்து வழங்குவதில் இருந்து கடல்நீரில் இருந்து மின்சாரம் செய்யப்படுவது வரை அனைத்து வசதிகளும் வழங்கப்படும்.

படமாளிகைகள், ஹோட்டல்கள், ஹெலிகொப்டர்கள் இறங்குவதற்கு தளங்கள் செயற்கைக் கடற்கரைகள், மிதக்கும் தீவுகளுக்கும் தரைக்கும் இடையே ஹெலிகொப்டர்கள், மின்சாரத்தில் இயங்கும் படகுகள். நீர் பஸ்கள் என்பன ஈடுபடுத்தப்படும்.

இதேவேளை சூறாவளி, கடல் அலைகள் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கக் கூடியதாக இந்த மிதக்கும் தீவுகள் அமைப்பது சம்பந்தமான பரீட்சார்த்த நடவடிக்கைகள் சோவியத் விஞ்ஞான நிபுணர்களினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

10 மீற்றர் விட்டம், 30 மீற்றர் உயரம், 4.5 மீற்றர் பருமன் கொண்ட காற்று அடிக்கப்பட்ட 96 போயாக்கள் மிதக்கும் தீவுகளின் கடலினுள் தாழவிடாமல் மிதக்க வைக்கும். பகுதி பகுதியாகக் கழற்றக் கூடியதாக இந்தப் பட்டினம் அமைக்கப்படும். பழுதான பகுதிகள் அகற்றப்பட்டு புதியவற்றைப் பொருத்தவும் முடியும். திருத்த முடியாதளவு நிலை ஏற்படின் அத்தீவுகள் அப்படியே கடலில் மூழ்கடிக்கப்படும்.

இந்த மிதக்கும் தீவுகள் குறித்து கருத்து வெளியிட்ட ஜோர்ஜிய நிபுணர்கள் "21 ஆம் நூற்றாண்டில் மிதக்கும் தீவுகளை கடலில் காணமுடியும்" என சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிவித்துள்ளனர்;

## சிங்கள – தமிழ் ஒப்பந்தங்கள் 1919 – 1980 ஆண்டுகள் வரை

தமிழர் பிரச்சினை தொடர்பாக சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த்தலைவர்களுக்கும் இடையே காலத்திற்குக் காலம் ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. பின்னர் அவை கிழித்தெறியப்பட்டன. அவற்றின் விபரங்கள் வருமாறு:-

**(1). 1919 ஆம் ஆண்டு ஜேம்ஸ்பீரிஸ்-அருணாசலம் ஒப்பந்தம்.**

மேல் மாகாணத்துத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை மையமாகக் கொண்டு, ஜேம்ஸ் பீரிஸ், சமரவிக்கிரம ஒருபக்கமாகவும் சேர் அருணாசலம் அவர்கள் மறுபக்கமாகவும் நின்று எழுதப்பட்ட ஒப்பந்தமாகும் ஆனால் 1921 ஆம் ஆண்டு சிங்கள - தமிழ் தலைவர்களிடையே ஓர் உடன்பாடு சாத்தியமற்றது என்ற வகையில் கிழித்தெறியப்பட்டது. இந்த உடன்பாடு குறித்து கருத்து வெளியிட்ட இலங்கைத்தேசிய காங்கிரஸ் தலைவர் எச். ஜே சி பெரேரா (1921 ஆம் ஆண்டு) ஒருமைப்பாட்டை நிலைப்படுத்தும் முகமாக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தனிப்பட்ட ஒரு சிலரால் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கை என்பதாலும் இந்த உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவித்தார்.

**(2). 1925 ஆம் ஆண்டு "மகேந்திர" ஒப்பந்தம்**

'மகேந்திரா' என்ற வைத்திலிங்கம் துரைசாமியின் வீட்டில் 1925 ஆம் ஆண்டு சி. இ. கொரியாவுக்கும் வைத்திலிங்கம் துரைசாமிக்கும் இடையில் பிரதி நிதித்துவம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். பின்னர் இந்த ஒப்பந்தமும் 1926 இல் காலியில் நடைபெற்ற காங்கிரஸ் சபைக் கூட்டத்துடன் முறிவடைந்தது.

**(3) 1957 ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம்.**

1957 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த எஸ் டபிள்யூ. ஆர் டி பண்டார நாயக்காவிற்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ் ஜே. வி. செல்வநாயகத்திற்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியது தமிழ் பேசும் மக்களுக்கு பிராந்திய அமைப்பு முறை ஒன்றை அங்கீகரிப்பதாக இந்த ஒப்பந்தம் காட்டியிருந்தது. ஆனாலும் 1958 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் பண்டாரநாயக்காவினாலேயே கிழித்தெறியப்பட்டது.

**(4). 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம்;**

1965 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவிற்கும். எஸ் ஜே வி. செல்வநாயகத்திற்கும் மாவட்டசபை குறித்து 1965 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது. ஆனாலும் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வராமல் முறிந்து போனது.

**(5) 1980 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பான உடன்பாடு.**

நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற ஜே ஆர். ஜெயவர்த்தனாவுக்கும். தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கத்திற்கும் இடையில் மாவட்ட அபிவிருத்திச்சபைதொடர்பாகஏற்படுத்தப்பட்ட உடன்பாடு(எழுத்தில்எழுதப்படவில்லை) இந்த உடன்பாடு கூட பின்னர் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு அதிகாரம் வழங்கப்படாத நிலையில் யு என். பி அரசாங்கத்தால் கைவிடப்பட்டது. – உமா

வளைகுடா நிரந்தர அமைதிக்கு

# இரசாயன ஆயுதங்களை ஈராக் அழித்து விடவேண்டும்

## ஐ. நாவில் அமெரிக்கா

(வாஷிங்டன்)

"இரசாயன கருவிகளையும் உயிரியல் கருவிகளையும் மேற்பார்வைக் கண்காணிப்பின் கீழ் ஈராக் அழித்துவிட வேண்டும்" என்ற தீர்மானத்தை அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் நாடுகளிடம் வளைகுடாவில் நிரந்தர அமைதிக்கான முதலாவது தீர்மான வாசகத்தை அமெரிக்கா சமர்ப்பித்தது.

கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் அடிப்படையில் ஈராக்கின் ஏவுகணைகள், இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை அழிப்பது, ஐ. நா. சபையின் பார்வையாளர் படையை அமைப்பதற்கு வழி செய்வது ஈராக் மீதான வர்த்தகத் தடைகளை அகற்றுவதற்கான கால அட்டவணை, போரில் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடு வழங்க அளிப்பதான முறை ஆகியன பற்றி அமெரிக்காவின் இந்தத் தீர்மானவாசகங்களை குறிப்பிடுகின்றன.

## ஈராக் போர் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது சரிதான் - ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

ஈராக்கிய வான் பகுதியில் போர்விமானச் சண்டை ஒன்றில் நேற்றுமுன்தினம் ஈராக்கிய போர்விமானம் ஒன்றை அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தியது நியாயம்தான் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வாஷிங்டனில் கூறியிருக்கின்றார் இது போன்ற சூழ்நிலையில் இப்படியான நடவடிக்கைகள் இன்னமும் மேற்கொள்ளப்படும் என்று புஷ் எச்சரிக்கையும் விடுத்தார்.

இதேவேளை, ஈராக்கிய நகரங்கள் மீது அத்துமீறி அமெரிக்க சுப்பர் சோனிக் விமானங்கள் திரும்பத் திரும்பப் பறந்ததைக் குறித்து ஈராக்கின் ஐ.நாவுக்கான தூதுவர் ஐ.நாவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## பொருளாதாரத் தடை நீக்க பிரான்ஸ், சீனா கோரிக்கை

(பீஜிங்)

ஈராக்கிற்குஎதிரானவாணிப பொருளாதாரத் தடைகளை இயன்றளவு விரைவில் நீக்குமாறு சீனாவும், பிரான்சும் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே போரின் கொடுமைகளால் இன்னலுற்ற ஈராக்கிய மக்களுக்கு இப்போது அன்றாட வாழ்க்கையே மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்பதைச் சர்வதேச சமூகத்தினர் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று சீன அரசாங்க உயர் அதிகாரிஒருவர்நேற்றுப் பீஜிங்கில் தெரிவித்தார்.

மேற்காசியா உட்பட பல முக்கியமான விடயங்களில் சீனாவும், பிரான்சும் கருத்து ஒற்றுமை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கின்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

னலாம்; இவ்வளவும் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் ஏற்படுகின்ற விளைவாக இருக்கும், சில வேளை ஈராக்கின் சதாம் ஹுசைன் நீக்கப்படாமலே பல குறுநில மன்னர்கள் ஒருநாட்டில் உள்ளது போன்று சதாம் ஹுசைனும் ஒரு குறுநில மன்னனாக பாக்தாதில் தொடர்ந்து இருக்கலாம்.

## "சிலுவை உலா"


(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் இன்று 22-3-91) தொடக்கம் மூன்று தினங்களுக்கு "சிலுவை உலா" என்னும் பக்தி - இசை - உரை - நாடகத்தை மாலை 6.45 மணிக்கு மேடையேற்றும்.

யாழ். பிரதான வீதி கலாமன்ற அரங்கில் நடைபெறும் மேற்படி நாடகத்திற்குப் பிரவேசம் இலவசமாகும். (21)

இன்று

ஆனால் இத்தாக்குதல் எப்போது தொடங்கும் என்பது அறிவிக்கப்படாத போதும், பெருமளவு துருப்புக்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் பி.பி.சி. மேலும் தெரிவித்தது.




## சுரங்கத்தில் மூடுண்டவர்கள் 46 மணித்தியாலத்தின் பின் மீட்பு

(பீஜிங்)

இரும்புச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட மண்சரிவினால் மூடுண்ட ஆறு தொழிலாளர்கள் நாற்பத்தியாறு மணிநேரத்தின்பின் மீட்கப்பட்டனர். சீனாவில்இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிமேலும் தெரிய வருவதாவது இரும்புச் சுரங்கத்தில் வேலை நடந்துகொண்டிருந்தபோது மண் சரிவு நடந்தது. இதனால் சுரங்கம் முற்றாக மூடியது. சேற்றிலும் சகதியிலும் மூடப்பட்ட இத்தொழிலாளர்கள் காயத்துடன் நாற்பத்தியாறு மணிநேரத்தின்பின் வெளியே வந்தனர். எஞ்சியவர்களை மீட்கும் பணிகள்தொடர்கின்றன.

## சத்திரசிகிச்சையில் தவறு; 2பேர் மரணம்; டாக்டர்கைது

(சென்னை)

சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் சில தினங்களுக்கு முன் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையின் மூலம் சிறுநீரகம் வழங்கியவர், பெற்றுக்கொண்டவர் ஆகிய இருவரும் மரணமானதைத் தொடர்ந்து அந்த மருத்துவமனை இயக்குனரும், அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட டாக்டரும் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டனர். போதிய கவனமின்றிச் சிகிச்சை மேற்கொண்டதாக அவர்கள்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

சிலாவத்துறை

செய்திகள் தெரிவிக்கின்றன: இருந்தும் புலிகள் இராணுவ முகாம்கள் மீது பலமான, தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டவண்ணம் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் தாக்குதலின் காரணமாக கொக்குப்படையான் இராணுவ முகாம் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டில் வந்துள்ளதாகவும், இராணுவத்தினரின் ஒருபகுதி கொல்லப்பட்டதாகவும், ஒருபகுதியினர் சிலாவத்துறை முகாமிற்கு ஓடியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, சிலாவத்துறை முகாமின் பல நிலைகள் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்துள்ளதாகவும் முகாம் வீழ்ச்சியுறும் நிலையில் உள்ளதாகவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை பலமான சண்டை நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், புலிகளின் தாக்குதலினால் சேதமடைந்த ஹெலிகொப்ரர்ஒன்றுசிலாவத்துறை இராணுவ முகாமிற்குள் தரையிறங்கியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும், சரியான சேத விபரம் உடன் பெறமுடியாமல் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

அத்தோடு இராணுவத்தினரிடம் இருந்து பலரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை, இம் முகாம்களில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் பற்றித் தெரிவிக்க சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துவிட்டதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

எதிர்பாராது

கடும் சண்டை மூண்டது.

இச்சண்டையில் இராணுவத்தின் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

125 பங்க,

திபக் கருகள் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம் மாணவர்கள் பூசா, பலாலி, வெலிவத்த, தெல்லிப்பெல ஆகிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

17 போராளிகள்

தன்-பனை) அம்பி (நாகலிங்கம் கனகரஞ்சன் புத்தூர்) ஆனோல்ட் (கிருஸ்ணபிள்ளை குணம் - வவுனியா) கொதிஸ் (சண்முகம் தவராசா - வரணி) கலா (வசந்திராசரத்தினம், திருமலை) ரதா (மேரிக்கியூரா தேவராசா வல்வெட்டித்துறை) டெலின் (தேஜ் ஞானரூபன் புளியங்கூடல்) ராசேந்திரகுமார் (சிவசங்கர்-நாவாந்துறை)

## அஞ்சலிக் கூட்டம்

கொழும்புத்துறை பிறக்கைப்பிறப்பிடமாகக் கொண்ட வீரவேங்கை ஏகாம்பரநாதன் உதயகுமாரின் (கிரமணி) 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று (22 3 91) வெள்ளிக்கிழமை மாலை7மணிக்கு கொழும்புத்துறை துறை முகச் சந்தியில்நடைபெறும் (24

தேர்தலைக்

கள் தாக்கல் செய்யப்படும் திகதி முதல் தொடங்கும் நடவடிக்கைகளை சார்க்அமைப்பு நாடுகளின் கண்காணிப்புக் குழு மேற்பார்வை செய்யும்.

தமிழ்க்குழு

கைது செய்த இராணுவத்தினர் அவர்களை முகாமுக்கு கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்களின் தற்போதைய நிலைமை பற்றி எதுவும் அறிய முடியவில்லை.

மறுநாள் செகிலநாயகம் கிராமத்தை சுற்றி வளைத்த நூற்றுக் கணக்கான இராணுவத்தினர்அப்பகுதிகளில் தேடுதல் நடாத்தினர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### சூ. மோசேஸ் அவர்கள்

பலாலி தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சூ. மோசேஸ் அவர்கள் 10 - 03 - 91 அன்று காலமானார். இவர் சூசை மரியம்மாவின் அன்பு மகனும், அன்னமரியம்மாவின் அன்புக்கணவரும், பிரான்சிலுள்ள ஸ்ரனிஸ்லாஸ் கொன்ஸ்ரன்ரைன், சந்திரிகா, றிச்சாட் டோணாஸ், டெலாஸ், மனோகரன் (கனடா), இந்திரா, மஞ்சுளா, சுபத்திரா, காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், பிரான்ஸ் லங்கேஸ்வரன் பாலேந்திரன், மேரி அஞ்சலா, கருணைநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றேசா, றொனால்ட், றொன்சன், கபிலன், றேகன், சிந்து, வான்மதி ஆகியோரின் அன்புப் பேரனும், தேவசகாயம் இக்னேசம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற பிலிப் திரவியம், சவரிமுத்து, மேரி யோசப்பின் (நல்லம்மா) ஆகியோரின் சகோதரரும், தங்கமலர், அன்னரத்தினம், இன்னராசா, செல்வராசா, அன்னமலர், நேசமணி ஆகியோரின் மைத்துனரும், இன்பராணியின் ஞானத்தந்தையுமாவார். அன்னாரின் நல்லடக்கம் நாளை 23 - 03 - 91 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வசாவிளான் அமல உற்பவ மாதா சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தகவல்:
க. கருணைநாதன்
(மருமகன்)

முக்கிய குறிப்பு: பருத்தித்துறை 2ஆம் குறுக்கு வீதியிலுள்ள அவர்களின் வீட்டில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப் பட்டுள்ளது.

(R/1201)

## வீர மரணம்

### யோகசாமி செந்தூரன் (புலவர்)

முன்னாள் வல்லை தொண்டமானாறு பிரதேசப் பொறுப்பாளர்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இவர் மன்னார் மாவட்டத்தில் நடந்த நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார். இவர் ந. யோகசாமி விமலாதேவி ஆகியோரின் இளைய புத்திரனும், யோ. முரளிதரன், நிவேதிகா, இருத்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். இவரின் இறுதிச்சடங்குகள் 22 - 03 - 91 இன்று எள்ளங்குளம் மாவீரர் மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

வல்வெட்டித்துறை.
(R/1202)

தகவல்:
அன்புத்தாய், தந்தை,
சகோதரர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.